**C.C.NO. 31/2016 – 07-11-2022**

**அ.சா.2 ___ வேலு**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

குறுக்கு விசாரணை:

நடந்ததாக சொல்லப்படும் வழக்கு சம்பவத்தைப் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரணை செய்த போது எழுதப்படாத பேப்பரில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. எழுதிய பேப்பரில் தான் கையெழுத்து செய்தேன். நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் தெரியும். வழக்கு சம்பவம் பற்றிய புகார் எழுதப்பட்டிருந்தது அதில் நான் கையெழுத்து செய்தேன். அ.சா.1 சிகப்பி எனது உறவினர் என்றால் சரிதான்.

மறு விசாரணை:

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்./-)ஆர்.எம்.மாரிமுத்து,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

**C.C.NO. 31/2016 – 07-11-2022**

**அ.சா.5 ___ சுப்பிரமணியன் த/பெ.வேலு**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

குறுக்கு விசாரணை:

1) நடந்ததாக சொல்லப்படும் வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் பற்றி புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் சொன்னதற்கிணங்க நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த வீட்டில் வைத்து கையெழுத்து செய்தேன். அ.சா.1 சிகப்பி எனது கிராமத்தை சேர்ந்தவர். நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. எந்த தேதியில் எத்தனை மணிக்கு எங்கு வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் ஞாபகமில்லை.

2) நான் கையெழுத்ததாக சொல்லும் வீடு ஓட்டு வீடா அல்லது தார்சு வீடா என்றால் தார்சு வீடு. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

மறு விசாரணை:

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்./-)ஆர்.எம்.மாரிமுத்து,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.